## மார்ச் - 11- தவக்கால 4ம் வார ஞாயிறு

**“ தம் மகனையே அளிக்கும் அளவிற்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்’**
**யோவான். 3: 16**

### முதல் வாசகம் : 2 குறிப்பேடு 36: 14 – 17, 19 – 23

அதுபோல், குருக்களின் தலைவர்களும், மக்களும் வேற்றினத்தாரின் அனைத்து அருவருப்புகளையும் தொடர்ந்து செய்து, உண்மையற்றவர்களாய், ஆண்டவர் தமக்காக எருசலேமில் தூய்மையாக்கியிருந்த திருக்கோவிலை மேலும் தீட்டுப்படுத்தினர். அவர்கள் மூதாதையரின் கடவுளாம் ஆண்டவர் தம் மக்களின் மீதும், தம் உறைவிடத்தின் மீதும் இரக்கம் கொண்டு, தம் தூதர்களை மீண்டும் மீண்டும் அவர்களிடம் அனுப்பினார். ஆனால் அவர்கள் கடவுளின் தூதர்களை ஏளனம் செய்து, அவர்தம் வார்த்தைகளைப் புறக்கணித்து, அவர்தம் இறைவாக்கினர்களை இழித்துரைத்தனர். ஆதலால், அவர்கள் தப்பமுடியாத அளவுக்கு ஆண்டவரது சினம் அவர்கள்மேல் கனன்றெழுந்தது. ஆதலால், அவர் அவர்களுக்கு எதிராக கல்தேயரின் மன்னனைப் படையெடுத்து வரச் செய்தார். அவன் அவர்களின் திருஉறைவிடமாகிய ஆண்டவரின் இல்லத்தில் அவர்களின் இளம் வீரர்களை வாளால் வெட்டி வீழ்த்தினான் இளைஞர் கன்னியர் என்றோ, முதியோர் இளைஞர் என்றோ, எவர்மேலும் இரக்கம் காட்டாமல், எல்லாரையும் அவன் கையில் ஆண்டவர் ஒப்புவித்தார். கடவுளின் இல்லத்தை அவர்கள் எரித்து, எருசலேமின் மதில்களைத் தகர்த்தனர் அங்கிருந்த அனைத்து அரண்மனைகளையும் தீக்கிரையாக்கி, விலையுயர்ந்த பொருள்கள் அனைத்தையும் அழித்தனர். மேலும் அவன் வாளுக்குத் தப்பியவர்களைப் பாபிலோனுக்கு நாடு கடத்தினான் பாரசீக அரசு எழும்பும்வரை அங்கே, அவர்கள் அவனுக்கும் அவன் புதல்வர்களுக்கும் அடிமைகளாக இருந்தனர். ”நாடு ஓய்வு நாள்களைக் கடைப்பிடிக்காததால், எழுபது ஆண்டுகள் பாழாய்க் கிடக்கும்” என்று எரேமியா உரைத்த ஆண்டவரின் வாய்மொழிகள் இவ்வாறு நிறைவேறின. பாரசீக மன்னன் சைரசு ஆட்சியின்முதல் ஆண்டில், எரேமியா உரைத்த ஆண்டவரின் வாய்மொழிகள் நிறைவேறும் வண்ணம், ஆண்டவர் அவனது மனத்தைத் தூண்டி எழுப்பினார். எனவே அவன் தனது நாடு முழுவதற்கும் மடல் வரைந்து அறிவித்தது யாதெனில் ”பாரசீக மன்னராகிய சைரசு என்னும் யாம் கூறுவது இதுவே விண்ணகக் கடவுளாம் ஆண்டவர் மண்ணக அரசுகள் எல்லாவற்றையும் எனக்கு அளித்துள்ளார். மேலும் யூதாவிலுள்ள எருசலேமில் அவருக்குத் திருக்கோவில் எழுப்புமாறு எனக்குப் பணித்துள்ளார். எனவே, அவருடைய மக்களாக இருப்பவர் அங்கு செல்லட்டும்! கடவுளாம் ஆண்டவர் உங்களோடு இருப்பாராக!”

**பதில்பாடல் :** உன்னை நான் நினையாவிடில் என் நா மேல் வாயோடு ஒட்டிக்கொள்வதாக

### இரண்டாம் வாசகம் : எபேசியர் 2 : 4 – 10

சகோதர சகோதரிகளே! கடவுள் மிகுந்த இரக்கம் உடையவர். அவர் நம்மீது மிகுந்த அன்புகொண்டுள்ளார். குற்றங்களின் காரணமாய் இறந்தவர்களாயிருந்த நாம் அவ்வன்பின் மூலம் இணைந்து உயிர் பெறச் செய்தார். நீங்கள் மீட்கப்பட்டிருப்பது அந்த அருளாலேயே. இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில் நாம் அவரோடு உயிர்த்தெழவும் விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார். கிறிஸ்து இயேசு வழியாகக் கடவுள் நமக்குச் செய்த நன்மையையும் அவரது ஒப்புயர்வற்ற அருள் வளத்தையும் இனிவரும் காலங்களிலும் எடுத்துக் காட்டுவதற்காகவே இவ்வாறு செய்தார். நீங்கள் அந்த அருளாலேயே நம்பிக்கையின் வழியாக மீட்கப்பட்டிருக்கிறீர்கள். இது உங்கள் செயல் அல்ல் மாறாக இது கடவுளின் கொடை. இது மனிதச் செயல்களால் ஆனது அல்ல. எனவே எவரும் பெருமை பாராட்ட இயலாது. ஏனெனில் நாம் கடவுளின் கைவேலைப்பாடு நற்செயல்கள் புரிவதற்கென்றே கிறிஸ்து இயேசு வழியாய்ப் படைக்கப்பட்டிருக்கிறோம். இவ்வாறு நற்செயல்கள் புரிந்து வாழும்படி கடவுள் முன்கூட்டியே ஏற்பாடு செய்திருக்கிறார்.

### நற்செய்தி: யோவான் 3 : 14 - 21

அக்காலத்தில் இயேசு நிக்கோதேமுக்குக் கூறியது: பாலைநிலத்தில் மோசேயால் பாம்பு உயர்த்தப்பட்டது போல மானிடமகனும் உயர்த்தப்பட வேண்டும். அப்போது அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர். தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர்மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். ஏனெனில் அவர்கள் கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. ஒளி உலகிற்கு வந்திருந்தும் தம் செயல்கள் தீயனவாய் இருந்ததால் மனிதர் ஒளியைவிட இருளையே விரும்பினர். இதில்தான் அவர்களுக்கு எதிரான தண்டனைத் தீர்ப்பு அடங்கியுள்ளது. தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர். தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை. உண்மைக்கேற்ப வாழ்பவர்கள் ஒளியிடம் வருகிறார்கள். இதனால் அவர்கள் செய்யும் அனைத்தையும் கடவுளோடு இணைந்தே செய்கிறார்கள் என்பது வெளியாகும்“ என்றார்.

**தியானம்:** தவக்காலத்தின் நான்காவது ஞாயிறுவார இறைவார்த்தைப் பகுதிகள் இவ்வுலகின் மேலும், எங்கள் மீதும் இறைவன் எவ்வளவு அன்பு கூர்ந்தார் என்பதை தெளிவுபபடுத்தி எம்மை ஒளியின் மக்களாக எமக்கு அழைப்ப விடுக்கின்றது. மனிதர்களாகிய நாம் பலவீனர்கள் இறைவனது சாயலாகப் படைக்கப்பட்டதால் அவரைப்போல் தூயவர்களாக வாழ அவர் விரும்புகின்றார். “உலகின் ஒளி நானே என்னைப் பின் செல்பவன் இருளிலே நடவான்” என்கின்றார். இயேசு ஒளி என்பது உண்மைக்கும், நன்மைக்கும் உருவகமாய் உள்ளது, கடவுள் உண்மையும் நன்மையும் ஆனவர். எமது இருளை அகற்ற இயேசுவின் ஒளி நமக்குத் தேவை. இருளில் வாழ்பவர்கள் ஒளியை வெறுக்கின்றார்கள் என்று இன்றைய நற்செய்தி வாசகங்கள் கூறுகின்றன. இருள் பாவத்தைக் குறிக்கின்றது, இயேசுவே உலகின் ஒளி. இந்த ஒளி உலகத்திற்கு வந்திருந்தும் நம் செயல்கள் தீயனவாய் இருந்ததனால் மனிதர் ஒளியை விட இருளையே விரும்பினர். ஒளியை வெறுத்ததாலே பாவம். பாவத்தில் வாழ்தல் என்பது கடவுள் கொடுத்த தண்டனை அல்ல மாறாக மனிதர் தாங்களே தங்களுக்கு கொடுத்த தண்டனைத் தீர்ப்பு. கடவுள் தன்னுடைய ஒரே மகனைத் தரும் அளவிற்கு அன்பு கூர்ந்தார். நம் பாவச் செயல்களும், துன்பமும், நோயும் நம்மீது நாம் வருவித்துக் கொண்டவையே. எனவேதான் வாழ்வளிக்கும் ஒளியை நோக்கிச் செல்வோம். வளிகாட்டும் இறைவனுக்கு செவிசாய்ப்போம், ஒளியின் மக்களாய் வாழ்வோம்.